| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **20/12/2023** | முதல் | **24/12/2023** | |
| அறிக்கை எண் : | **101/ 2023** | வெளியீட்டு நாள் : | | **19/12/2023** | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30° - 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.12.2023 முதல் 18.12.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –24-12-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/12 | 15/12 | 16/12 | 17/12 | 18/12 | தேதி | நாள்-1 20/12 | நாள்-2 21/12 | நாள்-3 22/12 | நாள்-4 23/12 | நாள்-5 24/12 |
| 0.0 | 0.0 | 0.0 | 11.3 | 36.4 | மழை (மி.மீ) | 4 | 2 | 6 | 0 | 2 |
| 31 | 33 | 31 | 30 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 24 | 23 | 24 | 24 |
| 21 | 24 | 23 | 25 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 23 | 23 |
| 4 | 5 | 6 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 4 | 7 | 4 | 6 |
| 79 | 67 | 83 | 85 | 95 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 54 | 70 | 83 | 89 | 90 | | 80 | 70 | 60 | 50 | 70 |
| 15 | 14 | 8 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 20 | 18 | 16 | 18 | 20 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 19 மற்றும் 22 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 23°-25° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 16 முதல் 20 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (15- 28 டிசம்பர் 2023):

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தைகண்காணிக்கவும்.

எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

நெல் வயல் மற்றும் இதர விளைநிலங்களில் போதிய வடிகால் வசதியினை ஏற்ப்படுத்தவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தக்காளி, மா, கால்நடை**

**தக்காளி:**
தக்காளியில் இலைப் பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இலைகளின் மேற் பரப்பில் வெண்ணிறத் திட்டுகள் காணப்படும், மலர்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்பாக விழுந்து விடும், குருத்து காய்ந்து விடும், மேலும் இலைப் பேன்கள் புள்ளி வாடல் வைரஸ் நோயை பரப்புகிறது.

இவற்றை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட செடிகளை வேருடன் பிடுங்கி அழிக்கவும்,

ஒரு ஏக்கருக்கு 10என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டு பொறியை அமைக்கவும்.

ஒரு ஏக்கருக்கு 50கிராம் என்ற அளவில் தையோமெத்தாக்சம் மருந்தினை தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ள வேண்டும்.

**மா:**
மா சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒட்டு மா செடிகளை நடுவதற்கு பின் வரும் முறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்

1. ஒரு மீட்டர் நீளம் ஒரு மீட்டர் அகலம் ஒரு மீட்டர் ஆழம் உள்ள குழிகளை செடிகள் நடுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வெட்ட வேண்டும். பின்னர் குழி ஒன்றுக்கு 10 கிலோ தொழு உரத்துடன் மேல் மண்ணை நன்கு கலந்து குழியின் முக்கால் பாகம் வரை மூட வேண்டும்.
2. ஒட்டுச் செடிகளை குழிகளின் மத்தியில் நட வேண்டும்.
3. செடிகள் நடவு செய்தவுடன் உடனடியாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**கால்நடை:**
தற்போது நிலவி வரும் குளிர்ந்த வானிலையின் காரணமாக, கால்நடைகளை, சூரியன் உதித்து 2 மணி நேரம் கழித்து மேச்சலுக்கு அனுப்ப வேண்டும்,

மாட்டு கொட்டகைகளை சுற்றி கோணி சாக்கு பை கொண்டு மறைத்து கட்டவும்,

கொட்டகைகளை ஈரப்பதம் இல்லாதது நன்கு உலர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேலும் உலர்ந்த தீவனங்கள் அல்லது பசுந் தீவனங்கள் கொடுக்கும் போது ஈரப்பதம் இல்லாமல் கொடுக்க வேண்டும்.